**சிறப்பு நீதிமன்றம் எண்.2 (LAOP), ஜெயங்கொண்டம்.**
**முன்னிலை: திரு.V.பிரேம்குமார்., B.A., B.L.,**
**சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP),**
**2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 20 ம் நாள் திங்கட்கிழமை**
**OS.NO.230/2024**
**(C.N.R.No. TNAL 06-000462-2024)**
**(அரியலூர், சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.42/2024)**
**(ஜெயங்கொண்டம், சார்பு நீதிமன்ற அசல் வழக்குஎண்.130/2024)**

மைனர் ஶ்ரீதக் ஷன்
அவருக்கு காப்பாளர் அவரது
தாய்வழி பாட்டி வளர்மதி ... வாதி

...எதிர்...

1. **கனகராசு**
2. வட்டாட்சியர்
உடையார்பாளையம்
3. மாவட்ட ஆட்சியர்
அரியலூர் ... பிரதிவாதிகள்
**(1st Defendant Name Amended as per IA.5/2024**
**in Order Dated.2.12.2024)**

இந்த அசல் வழக்கானது முதன் முதலில் அரியலூர் விடுமுறை கால நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.42/2024 ஆக கடந்த 17.05.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பிறகு மாண்புமிகு அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் D.No.6789/2024, நாள் 03.06.2024-இன்

உத்தரவுபடி ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.130/2024 ஆக கடந்த 04.06.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் A.No.74/2024, நாள் 06.07.2024ன் உத்தரவுபடி ஜெயங்கொண்டம் சிறப்பு நீதிமன்றம் எண்.2-ற்கு இந்த வழக்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.230/2024 ஆக கடந்த 13.08.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 15.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.M.சண்முகநாதன் மற்றும் திரு.V.தேவேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 2,3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.G.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி கடந்த 09.04.2024 அன்று ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டும், வாதி மற்றும் 2,3 பிரதிவாதிகளின் வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

தாவா சொத்து மைனர் வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்யக் கோரியும், தாவா சொத்தில் வாதிக்குண்டான

அமைதியான அனுபோகத்தினை 1ம் பிரதிவாதியோ, அவர்தம் முகவர்களோ எந்த விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்து பொருத்து மைனர் வாதியின் பெயரில் உள்ள கூட்டு பட்டாவில் 2,3 பிரதிவாதிகளால் 1ம் பிரதிவாதியின் பெயரை சேர்க்காத வண்ணம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்குரையின் சுருக்கம்:-**

(i) தாவா சொத்து இந்த மைனர் வாதியின் தாயார் யோகராணி என்பவரால் கடந்த 08.07.2016 ம் தேதி கிரையம் வாங்கப்பட்டு பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டு அரசு உதவியுடன் மெத்தை வீடு கட்டி குடியிருந்து வந்தார். கடந்த 02.02.2020 ம் தேதி மைனர் வாதியை வாரிசாக விட்டுவிட்டு தாய் யோகராணி இறந்துவிட்டார். இந்த 1ம் பிரதிவாதி, ஜோதி என்ற பெண்ணை திருமணம் செய்து சூர்யா என்ற ஆண் மகன் உள்ளார். அந்த திருமணத்தை மறைத்து 1 ம் பிரதிவாதி இந்த மைனர் வாதியின் தாயார் யோகராணியுடன் சேர்ந்து வாழ்ந்ததில் இந்த மைனர் வாதி பிறந்துள்ளார். மைனர் வாதியையும், அவரது தாயாரையும் அனாதரவு செய்துவிட்டு 1ம் பிரதிவாதி வெளிநாடு சென்றுவிட்டார். அவர் வெளிநாடு சென்று திரும்பிய காலத்தில் மைனர் வாதியின் தாய்வழி தாத்தா செல்லக்கண்ணு மூலம்

வாங்கிய கடனை தீர்க்கவில்லை. மைனர் வாதியின் தாயார் யோகராணி இறந்த பிறகு வெளிநாட்டிலிருந்து வந்த 1ம் பிரதிவாதி தூத்துரை சேர்ந்த ஒரு குழந்தைக்கு தாயாரான கோமதி என்பவரை 1ம் பிரதிவாதி சேர்மானமாக வைத்து கொண்டு கனிஷ்கா என்ற ஒரு பெண் குழந்தை கடந்த 06.03.2022 ம் தேதியன்று பிறந்துள்ளது. 1ம் பிரதிவாதி மைனர் வாதியை தாவா சொத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு தனது வைப்பாட்டியான கோமதியை தாவா சொத்திற்கு அழைத்து வந்து குடும்ப நடத்த முயற்சி செய்தார்.

(ii) தாவா சொத்து பொருத்து கடந்த 05.04.2016ம் தேதி மைனர் வாதியின் தாத்தா செல்லக்கண்ணுவை வீரசுந்தரி என்ற பெண்ணிடமிருந்து கிரையம் ஒப்பந்தம் போட்டு அதற்கு பிறகு தனது மகளான மைனர் வாதியின் தாயார் யோகராணி பெயரில் கிரைய பத்திரம் எழுதி பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதி வேறு மாவட்டத்தை சேர்ந்தவர் முதல் மனைவியான ஜோதியுடன் ஏற்பட்ட திருமணத்தை மறைத்து யோகராணியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார். யோகராணியின் தாவா கிரைய சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் அனுபவமும் இல்லை. மைனர் வாதியின் தாயார் யோகராணி இறந்த பிறகு மைனர் வாதிக்கு வாரிசு சான்றிதழும், மைனர் வாதியின் பெயரில் தாவா சொத்துக்கு பட்டா பெயர் மாற்றமும் ஏற்பட்டு வாதியின்

அனுபவத்தில் இருந்து வருகிறது. இந்த நிலையில் இந்த 1ம் பிரதிவாதி மைனர் வாதிக்கு கார்டியனாக கண்டு மைனர் வாதியின் தாய்வழி பாட்டி வளர்மதிக்கு எதிராகவும், கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களுக்கு எதிராக ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.135/2022 என்ற வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு கடந்த 15.02.2024 ம் தேதியில் வாதி தரப்பில் மேல்நடத்த விருப்பம் இல்லை என குறிப்பாணை தாக்கல் செய்து தள்ளுபடி ஆகியுள்ளது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் தனது வைப்பாட்டியான கோமதியை அழைத்து வந்து குடும்பம் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் 2,3 பிரதிவாதிகள் மூலம் 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டாவில் பெயர் சேர்க்கவும் ஆக்கிரமிக்கவும் முயற்சி செய்து வருகிறார். 2ம் பிரதிவாதி அலுவலகம் மூலம் மைனர் வாதியின் பெயரிலும் கூட்டுப்பட்டாவில் 1ம் பிரதிவாதியின் பெயரை சேர்க்க முயற்சித்து வருவதால் தரப்பினராக 2,3 பிரதிவாதிகள் சேரக்கப்பட்டுள்ளனர் என்று வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.**

அசல் மைனர் வாதியின் உண்மையான கார்டியன் யார் என்பதை தெளிவுப்படுத்தவில்லை. ஏனெனில் இவ்வழக்கில்

கண்ட 1ம் பிரதிவாதி கடந்த 2022ம் ஆண்டு ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தான்தான் கார்டியன் என்றும், மைனர் ஸ்ரீதக்ஷன் சார்பாக OS.135/2022 என்ற எண்ணின் கீழ் வழக்கு தாக்கல் செய்திருந்தது குறிப்பிடம்தக்கது. மேற்படி வழக்கிலும் பிரதிவாதிகளாக அரசு தரப்பினர்களை சேர்த்துவிட்டு மேற்படி வழக்கை இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதியே மேல் நடத்த விருப்பமில்லை என கூறி வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார். இவ்வழக்கில் கண்ட தாவா சொத்தானது மைனர் வாதியின் தாயார் யோகராணி என்பவர் 08.07.2016 ல் விக்கரமங்கலம் சார்பதிவகத்தில் பதிவு எண்.806/2016 ஆக பதியப்பட்டு கிரையம் பெற்ற கிரையபத்திரத்தின்படி உறுதிசெய்யப்பட்டு மேற்படி கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் மொத்த விஸ்தீரனத்தில் ஒரு பகுதியை மட்டுமே கிரையம் பெற்றதனால் இதர சொத்துக்களின் உரிமையாளர் பெயருடன் மைனர் ஸ்ரீதக்சன் பெயரும் சேர்த்து கூட்டுபட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. வாதி தாவாவில் குறிபிட்டுள்ளது போல யார் பெயரை யார் சொத்தில் வேண்டுமானாலும் பெயர் சேர்ப்பது இல்லை. உரிய பதிவு செய்யப்பட்ட ஆதரவுகளின் அடிப்படையில் தான் 2ம் பிரதிவாதியால் பட்டா வழங்கப்படுகிறது. இவ்வாறாக அரசு தரப்பில் பட்டா பெயர் மாற்றவும், புதிதாக பட்டா வழங்கவும் அரசு ஆணைகளில் குறிப்பிட்டுள்ள செயல் முறைகளின்படி தான் 2ம் பிரதிவாதி செயல்பட்டு வருகிறார். இவ்வாறுள்ள

நிலையில் எந்த முகாந்திரமும் இல்லாமல் உத்தேசமாக பட்டா பெயர் மாற்றம் செய்ய கூடாதென கோரி 2, 3 பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில், இவ்வழக்கில் கடந்த 04.06.2025 ம் தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| **1.** | **Whether the suit property belongs to the minor plaintiff and whether she is in possession and enjoyment of the suit property?** |
| **2.** | **Whether the plaintiff is entitled for the relief of declaration as prayed for?** |
| **3.** | **Whether the 1st defendant interfere with the peaceful possession and enjoyment of the plaintiff in the suit property?** |
| **4.** | **Whether the plaintiff is entitled for the relief of permanent injunction?** |
| **5.** | **To what other relief the plaintiff is entitled to ?** |

5) மைனர் வாதியின் வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில், மைனர் வாதி தரப்பில், வாதியின் கார்டியனும், அவரது தாய்வழி பாட்டியுமான **வளர்மதி வா.சா.1** ஆக

விசாரிக்கப்பட்டு, **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2,3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

மைனர் வாதி மற்றும் 2,3 பிரதிவாதிகளின் வழக்கறிஞர்களின் வாய்மொழி விவாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6) <u>வழக்கெழுவினாக்கள் 1 மற்றும் 2 க்கான தீர்வு:-</u>**

(i) மைனர் வாதி ஸ்ரீதக்ஷனின் தாயார் யோகராணி ஆவார். இந்த வழக்கானது மேற்படி மைனர் வாதியின் தாய்வழி பாட்டி வளர்மதி என்பவர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி மைனர் வாதியின் தந்தையாவார். 1ம் பிரதிவாதி முதலில் ஜோதி என்பவரை திருமணம் செய்து அவருக்கு ஒரு ஆண் குழந்தை உள்ள நிலையில், மைனர் வாதியின் தாயார் யோகராணியை கடந்த 2011ம் ஆண்டு இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார்.

(ii) இந்த வழக்கில் மைனர் வாதியின் தாய்வழி பாட்டியும், அவரது காப்பாளருமான வளர்மதி என்பவர் வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். தாவா சொத்தை மைனர் வாதியின் தாயார்

யோகராணி கடந்த 08.07.2016 அன்று தம்புசாமி மற்றும் சுந்தரி ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மைனர் வாதியின் தாயாரான யோகராணி கடந்த 02.02.2020 அன்று இறந்துள்ளார். அவருடைய இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தின்படி தாவா சொத்து வாதியின் தாயார் யோகராணி என்பவரால் கிரையம் பெறப்பட்டது என்பது தெரியவருகிறது. 1ம் பிரதிவாதி கடந்த 18.03.2021 அன்று இந்த மைனர் வாதியின் காப்பாளரும், தாய்வழி பாட்டியுமான வளர்மதி மற்றும் அவருடைய கணவர் செல்லக்கண்ணு மற்றும் அவர்களுடைய மகன் பழனிவேல் ஆகியோர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது கடந்த 08.07.2016 ல் கிரையம் பெறப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கடந்த 18.03.2021 அன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பான வா.சா.ஆ.6ல் தாவா சொத்தை தான் கிரையம் பெற்றதாக குறிப்பிடவில்லை .மேற்படி அறிவிப்பில் 1ம் பிரதிவாதி மேற்சொன்ன வளர்மதி, செல்லக்கண்ணு, பழனிவேல் ஆகியோர்களுக்கு தான் வெளிநாட்டிலிருந்து அனுப்பிய

பணத்தை திரும்ப கேட்டும், மைனர் வாதியை ஒப்படைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பியுள்ளார். தாவா சொத்தை பற்றி அறிவிப்பில் குறிப்பிடவில்லை.

(iv) 1ம் பிரதிவாதி ஏற்கனவே மேற்படி வாதியின் காப்பாளரும், தாய்வழி பாட்டியுமான வளர்மதி மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு எதிராக தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கும், மைனர் வாதிக்கும் பாத்தியப்பட்டது என்றும், தனது மனைவியான யோகராணிக்கு வழங்கிய வாரிசு சான்றிதழ் செல்லாது என்று விளம்புகை செய்யக்கோரியும், வாரிசு சான்றிதழ் அடிப்படையில் தாவா சொத்துக்கான பட்டாவில் மைனர் வாதியின் தாய்வழி பாட்டி வளர்மதி பெயரை நீக்கக் கோரியும், ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.135/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த அசல் வழக்கு எண்.135/2022 ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் நகல் வா.சா.ஆ.8 ஆகவும், எதிர்வழக்குரையின் நகல் வா.சா.ஆ.9 ஆகவும், தீர்ப்புரையின் நகல் வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு எண்.135/2022ஐ 1ம் பிரதிவாதி வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதன் அடிப்படையில் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் பிரதிவாதி

இந்த வழக்கிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

(v) வா.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பில் 1ம் பிரதிவாதி தனக்கு ஏற்கனவே 2000ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது என்றும், முதல் மனைவியுடன் பிணக்குகள் ஏற்பட்டு அதன்பின்பு ஊர் பெயரிவர்கள் முன்னிலையில் முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு பிறகு மைனர் வாதியின் தாயார் யோகராணியை திருமணம் செய்துகொண்டதாக குறிப்பிட்டுள்ளார். 1ம் பிரதிவாதி முதல் மனைவியை சட்டப்படி விவாகரத்து செய்யாமல் மைனர் வாதியின் தாயாரான யோகராணியை திருமணம் செய்துள்ளார். எனவே அந்த திருமணம் இல்லா நிலையது. அதனால் மேற்படி யோகராணியின் வாரிசு சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்படவில்லை. மேலும், மேற்படி யோகராணிக்கு 1ம் பிரதிவாதி கணவர் என்ற முறையில் வாரிசாக முடியாது. தாவா சொத்து மைனர் வாதியின் தாயார் யோகராணியால் கிரையம் பெறப்பட்டுள்ளதால் வாரிசு அடிப்படையில் மைனர் வாதி மற்றும் யோகராணியின் தாயாரும், மைனர் வாதியின் காப்பாளருமான வளர்மதி ஆகியோர்களுக்கு தாவா சொத்து பாத்தியமானதாகும். தாவா சொத்தானது வீட்டுடன் கூடிய மனையாகும். தாவா சொத்துக்கான பட்டா மைனர் வாதி மற்றும் அவருடைய தாய்வழி பாட்டி வளர்மதி ஆகியோர் பெயரில்

கூட்டாக உள்ளது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் மற்றும் வா.சா.ஆ.2 பட்டா ஆகியவற்றின் அடிப்படையில் தாவா சொத்து தாவா சொத்து மைனர் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதும் மைனர் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதும், மைனர் வாதி தரப்பில், அவரது காப்பாளர் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே மைனர் வாதி கோரியபடி தாவா சொத்து மைனர் வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே **வழக்கெழு வினாக்கள் 1 மற்றும் 2** க்கு தீர்வு காணப்படுகிறது.

**7) வழக்கெழுவினா 3 க்கான தீர்வு:-**

1ம் பிரதிவாதி ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்து தனக்கும், மைனர் வாதிக்கும் சொந்தமானது என்று அசல் வழக்கு எண்.135/2022 என்ற வழக்கை மேற்படி வாதியின் காப்பாளரும், தாய்வழி பாட்டியுமான வளர்மதி மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். அதன்படி தாவா சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதி மைனர் வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்ய முயற்சித்துள்ளார் என்பது மைனர் வாதி தரப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே **வழக்கெழு வினா 3 க்கு** தீர்வு காணப்படுகிறது.

8) <u>வழக்கெழு வினா 4 க்கான தீர்வு:-</u>

(i) மைனர் வாதி தரப்பில் தாவா சொத்துக்கான கூட்டுப்பட்டாவில் 1ம் பிரதிவாதியின் பெயரை சேர்க்கக்கூடாது என்று 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. 2,3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் இவ்வழக்கில் கண்ட தாவா சொத்தானது மைனர் வாதியின் தாயார் யோகராணி என்பவரால் 08.07.2016 ல் விக்கரமங்கலம் சார்பதிவகத்தில் பதிவு எண்.806/2016 ஆக பதியப்பட்டு கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின்படி உறுதிசெய்யப்பட்டு மேற்படி கிரைய பத்திரத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் மொத்த விஸ்தீரனத்தில் ஒரு பகுதியை மட்டுமே கிரையம் பெற்றதனால் இதர சொத்துக்களின் உரிமையாளர் பெயருடன் மைனர் ஸ்ரீதக்சன் பெயரும் சேர்த்து கூட்டுபட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றும், உரிய பதிவு செய்யப்பட்ட ஆதரவுகளின் அடிப்படையில் தான் 2ம் பிரதிவாதியால் பட்டா வழங்கப்படுகிறது என்றும், அரசு தரப்பில் பட்டா பெயர் மாற்றவும், புதிதாக பட்டா வழங்கவும் அரசு ஆணைகளில் குறிப்பிட்டுள்ள செயல் முறைகளின்படி தான் 2ம் பிரதிவாதி செயல்பட்டு வருகிறார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) தாவா சொத்து மைனர் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று முந்தைய எழுவினாவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் செயல்பட வேண்டும். பட்டாவில் பெயர் சேர்ப்பது 2,3 பிரதிவாதிகளின் அலுவல் சம்மந்தப்பட்ட பணியாகும். அது அவர்களுடைய சட்டப்படியான கடமையாகும். அதில் நீதிமன்றம் தலையிட முடியாது. எனவே தாவா சொத்துக்கான பட்டாவில் 1ம் பிரதிவாதியின் பெயரை 2,3 பிரதிவாதிகள் சேர்க்கக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே **வழக்கெழுவினா 4க்கு** தீர்வு காணப்படுகிறது.

9) **<u>வழக்கெழுவினா 5க்கான தீர்வு:-</u>**

இந்த வழக்கில் மைனர் வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை. தரப்பினர்களின் உறவுமுறைகளை கருத்தில் கொண்டு வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறே **வழக்கெழு வினா 5க்கு** தீர்வு காணப்படுகிறது.

**10) முடிவாக**

| | |
|---|---|
| 1. | அசல் வழக்கு எண். 230/2024 பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.<br>தாவா சொத்து மைனர் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்தில் மைனர் வாதியின் அனுபவத்திற்கு 1ம் பிரதிவாதியோ அவரது ஆட்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர |

| | |
|---|---|
| | உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் இந்நீதிமன்றம் தீரப்பளிக்கிறது.<br>2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக மைனர் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. |
| 2. | வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். |

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

PREMKUMAR
Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.07.20 17:19:47 +1000

சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP)
ஜெயங்கொண்டம்.

**வாதி தரப்பு சாட்சி:-**

| | |
|---|---|
| வா.சா.1 | வளர்மதி (வாதியின் காப்பாளர் அவரது தாய்வழி பாட்டி) |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.07.2016 | மைனர் வாதியின் தாயார் யோகராணி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 11.02.2021 | தாவா சொத்துக்கான கணினி பட்டா |
| வா.சா.ஆ.3 | 26.06.2020 | மைனர் வாதியின் தாயார் யோகராணியின் இறப்பு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.4 | 17.07.2020 | மைனர் வாதியின் தாயார் யோகராணியின் வாரிசு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.5 | 05.04.2016 | செல்லக்கண்ணு பெயரில் உள்ள பதிவில்லாத கிரைய ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.6 | 18.03.2021 | 1ம் பிரதிவாதி, மைனர் வாதியின் தாய்வழி பாட்டி குடும்பத்தார்களுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | 24.03.2021 | மேற்படி அறிவிப்பிற்கு மைனர் வாதியின் தாய்வழி பாட்டி குடும்பத்தார்கள் அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.8 | - | அசல் வழக்கு எண்.135/2022 ன் பிராதின் நகல் |
| வா.சா.ஆ.9 | - | அசல் வழக்கு எண்.135/2022ன் எதிர்வழக்குரை நகல் |
| வா.சா.ஆ.10 | 15.02.2024 | அசல் வழக்கு எண்.135/2022 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-இல்லை</u>

PREMKUMAR
Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.07.20 17:19:34 +1000

சிறப்பு நீதிபதி எண்.2 (LAOP)
ஜெயங்கொண்டம்.